# தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு

[குதம்பைச் சித்தர் பாடலின் மெட்டு]

புவியிற் சமூகம் இன்பம்
பூணல் சமத்துவத்தால்
கவிழ்தல் பேதத்தாலடி—சகியே
கவிழ்தல் பேதத்தாலடி!

புவிவேகம் கொண்டு செல்லும்
போதில்உடன் செல்லாதார்!
அவிவேகம் கொண்டாரடி—சகியே
அவிவேகம் கொண்டாரடி!

தாழ்வென்றும் உயர்வென்றும்
சமூகத்திற் பேதங்கொண்டால்
வாழ்வின்பம் உண்டாகுமோ?—சகியே
வாழ்வின்பம் உண்டாகுமோ?

தாழ்ந்தவர் என்றுநீக்கிச்
சமுதாயச் சீர்தேடி
வாழ்ந்தது காணேனடி—சகியே
வாழ்ந்தது காணேனடி!

பிறப்பி லுயர்வுதாழ்வு
பேசும் சமூகம்மண்ணில்
சிறக்குமோ சொல்வாயடி—சகியே
சிறக்குமோ சொல்வாயடி?

பிறந்த முப்பது கோடிப்
பேரில் ஐங்கோடி மக்கள்
இறந்தாரோ சொல்வாயடி—சகியே
இறந்தாரோ சொல்வாயடி?

இதந்தரும் சமநோக்கம்
இல்லா நிலத்தில் நல்ல
சுதந்தரம் உண்டாகுமோ—சகியே
சுதந்தரம் உண்டாகுமோ

பதம்பெறப் பணிசெய்வோர்
பகைகொண்டார் எனில்எந்த
விதம்அஃது கொள்வாரடி—சகியே
விதம்அஃது கொள்வாரடி?

சோதர பாவம் நம்மில்
தோன்றாவிடில் தேசத்தில்
தீதினி நீங்காதடி—சகியே
தீதினி நீங்காதடி!

பேதம் பாராட்டி வந்தோம்
பிழைசெய்தோம் பல்லாண்டாக
மீதம் உயிர்தானுண்டு—சகியே
மீதம் உயிர் தானுண்டு!

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர் தாய்
கர்ப்பத்தில் வந்தாரன்றோ—சகியே
கர்ப்பத்தில் வந்தாரன்றோ?

பொற்புடை முல்லைக்கொத்தில்
புளியம்பூ பூத்ததென்றால்
சொற்படி யார் நம்புவார்—சகியே
சொற்படி யார் நம்புவார்!

தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ?
ஈண்டிதை யார் நம்புவார்—சகியே
ஈண்டிதை யார் நம்புவார்?

தீண்டாமை ஒப்புகின்றார்
தீண்டாரிடம் உதவி
வேண்டாமல் இல்லையடி—சகியே
வேண்டாமல் இல்லையடி!

அடிமை கொடியதென்போர்
அவர்சோத ரர்க்கிழைக்கும்
மிடிமையை எண்ணாரடி—சகியே
மிடிமையை எண்ணாரடி

கொடியோர் பஞ்சமர் என்று
கூடப் பிறந்தோர்க்கிவர்
சுடும்பேர் வைத்திட்டாரடி!—சகியே
சுடும்பேர் வைத்திட்டாரடி!

தீண்டாதார் பழங்கீர்த்தி
தெரிந்தால் தீண்டாமைப்பட்டம்
வேண்டாதார் இல்லையடி—சகியே
வேண்டாதார் இல்லையடி!

ஆண்டார் தமிழர் இந்நா
டதன்பின் ஆரியர் என்போர்
ஈண்டுக் குடியேறினார்—சகியே
ஈண்டுக் குடியேறினார்!

வெள்ளை யுடம்புகாட்டி
வெறும்வாக்கு நயம்காட்டிக்
கள்ளங்கள் செய்தாரடி—சகியே
கள்ளங்கள் செய்தாரடி!

பிள்ளைக்குக் கனிதந்து
பின்காது குத்தல்போல்தம்
கொள்கை பரவச் செய்தார்—சகியே
கொள்கை பரவச் செய்தார்!

கொல்லா விரதம் கொண்டோர்
கொலைசெய்யும் ஆரியர் தம்
சொல்லுக் கிசைந்தாரடி—சகியே
சொல்லுக் கிசைந்தாரடி!

நல்ல தமிழர் சற்றும்
நலமற்ற ஆரியர்தம்
பொல்லாச்சொல் ஏற்றாரடி—சகியே
பொல்லாச்சொல் ஏற்றாரடி!

ஏச்சும் எண்ணார் மானம்
இல்லாத ஆரியர்
மிலேச்சர்என் றெண்ணப்பட்டார்—சகியே
மிலேச்சர்என் றெண்ணப்பட்டார்!

வாய்ச்சாலத் தால்கெட்ட
வஞ்சகத்தால் கலகத்தால்
ஏய்ச்சாள வந்தாரடி—சகியே
ஏய்ச்சாள வந்தாரடி!

மன்னர்க் கிடையில் சண்டை
வளர்த்தார்தம் வசமானால்
பொன்னாடுசேர்வார் என்றார்—சகியே
பொன்னாடுசேர்வார் என்றார்!

பொன்னாட்டு மாதர் போலும்
பூலோகத் தில்லை-யென்று
மன்னர்பால் பொய்கூறினார்—சகியே
மன்னர்பால் பொய்கூறினார்!

வான்மறை எனத்தங்கள்
வழக்கம் குறித்தநூலைத்
தேன்மழை என்றாரடி—சகியே
தேன்மழை என்றாரடி!

"ஏன்மறை" எங்கட்கென்றே
இசைத்தால் ஆரியர் நீங்கள்
வான்புகத் தானென்றனர்—சகியே
வான்புகத் தானென்றனர்!

மேலேழு லோகம் என்றார்
கீழேழு லோகம் என்றார்
நூலெல்லாம் பொய்கூறினார்—சகியே
நூலெல்லாம் பொய்கூறினார்!

மேலும் தமை நிந்திப்போர்
மிகுகஷ்டம் அடைவார்கள்
தோலோதோல் கூடாதென்றார்—சகியே
தோலோதோல் கூடாதென்றார்

சுவர்க்கத்தில் தேவன் என்போர்
சுகமாய் இருப்பதுண்டாம்
அவர்க்குத்தாம் சொந்தம்என்றார்—சகியே
அவர்க்குத்தாம் சொந்தம்என்றார்!

துவக்கத்தில் ஆரியரைத்
தொழுதார் இறந்தபின்பு
சுவர்க்கஞ்சொல் வார்என்றனர்—சகியே
சுவர்க்கஞ்சொல் வார்என்றனர்!

தம்சிறு வேதம்ஒப்பாத்
தமிழரை ஆரியர்கள்
நஞ்சென்று கொண்டாரடி—சகியே
நஞ்சென்று கொண்டாரடி!

வெஞ்சிறு வேதம்ஒப்பா
வீரரை ஆரியர்கள்
வஞ்சித்துக் கொன்றாரடி—சகியே
வஞ்சித்துக் கொன்றாரடி!

அழிவேதம் ஒப்பாதாரை
அரக்கரென் றேசொலிப்
பழிபோட்டுத் தலைவணங்கினார்—சகியே
பழிபோட்டுத் தலைவணங்கினார்!

பழிவேதம் ஒப்போம்என்று
பண்டைத் தமிழர்தம்மைக்
கழுவேற்றிக் கொன்றாரடி—சகியே
கழுவேற்றிக் கொன்றாரடி!

ஆரியர்தமை ஒப்பா
ஆதித் திராவிடரைச்
சேரியில் வைத்தாரடி—சகியே
சேரியில் வைத்தாரடி!

சேரிப் பறையர்என்றும்
தீண்டாதார் என்றும்சொல்லும்
வீரர்நம் உற்றாரடி—சகியே
வீரர்நம் உற்றாரடி!

வெஞ்சமர் வீரர்தம்மை
வெல்லாமற் புறந்தள்ளப்
பஞ்சமர் என்றாரடி—சகியே
பஞ்சமர் என்றாரடி!

தஞ்சம் புகாத்தமிழர்
  சண்டாளர் எனில்தாழ்ந்து
கொஞ்சுவோர் பேரென்னடி!—சகியே
  கொஞ்சுவோர் பேரென்னடி!

மாதர் சகிதம்தங்கள்
  மதத்தைத் தமிழ்மன்னர்க்குப்
போதனை செய்தாரடி—சகியே
  போதனை செய்தாரடி!

சூதற்ற மன்னர் சில்லோர்
  சுவர்க்கக் கதையை நம்பித்
தீதுக் கிசைந்தாரடி—சகியே
  தீதுக் கிசைந்தாரடி!

உலகம் நம்மைப் பழிக்க
  உட்புகுந் தாரியர்கள்
கலகங்கள் செய்தாரடி—சகியே
  கலகங்கள் செய்தாரடி!

கொலைக்கள மாக்கிவிட்டார்
  குளிர்நாட்டைத் தம்வாழ்வின்
நிலைக்களம் என்றாரடி—சகியே
  நிலைக்களம் என்றாரடி!

சாதிப் பிரிவு செய்தார்
  தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி—சகியே
  நீதிகள் சொன்னாரடி!

ஓதும் உயர்வுதாழ்வை
  ஆரியர் உரைத்திட்டால்
ஏதுக்கு நாம்ஏற்பதோ—சகியே
  ஏதுக்கு நாம்ஏற்பதோ?

ஊர்இரண்டு படுங்கால்
  உளவுள்ள கூத்தாடிக்குக்
காரியம் கைகூடுமாம்—சகியே
  காரியம் கைகூடுமாம்!

நேர்பகை யாளிஎன்னை
  நீசசென்றால் என்சுற்றத்
தார்என்னைத் தள்ளாரடி—சகியே
  சுற்றத் தார்என்னைத் தள்ளாரடி.

வீரமில் ஆரியரின்
  வீண்வாக்கை நம்பினால்நம்
காரியம் கைகூடுமோ?—சகியே

ஆரியர் சொன்னவண்ணம்
ஆண்டுபல கழித்தோம்
காரியம் கைகூடிற்றா—சகியே
காரியம் கைகூடிற்றா?

எத்தால் வாழ்வுண்டாகும்! நாம்
ஒத்தால் வாழ்வுண்டாகும் இஃது
சத்தான பேச்சல்லவோ?—சகியே
சத்தான பேச்சல்லவோ?

எத்தான பேச்சைநம்பி
இரத்தக் கலப்பைநீக்கிச்
சத்தின்றி வாழ்வாருண்டோ—சகியே
சத்தின்றி வாழ்வாருண்டோ?

ஆரியப் பேர்மறைந்தும்
அவர்வைத்த "தீண்டார்" என்ற
பேர்நிற்றல் ஏதுக்கடி—சகியே
பேர்நிற்றல் ஏதுக்கடி?

ஆரியர் பார்ப்பாரானால்
அவர்சொன்ன தீண்டாதார்கள்
சேரியில் ஏன்தங்கினார்?—சகியே
சேரியில் ஏன்தங்கினார்?

ஊர்தட்டிப் பறித்திட
உயர்சாதி என்பார்இஃதை
மார்தட்டிச் சொல்வேனடி—சகியே
மார்தட்டிச் சொல்வேனடி!

ஓர்தட்டில் உயர்ந்தோர்மற்
றொன்றில் தாழ்ந்தோரை இட்டுச்
சீர்தூக்கிப் பார்ப்போமடி—சகியே
சீர்தூக்கிப் பார்ப்போமடி

தீண்டாதார் சுத்தமற்றோர்
என்றாலச் சுத்தத் தன்மை
தாண்டாதார் எங்குண்டடி?—சகியே
தாண்டாதார் எங்குண்டடி?

தீண்டாதார் ஊனுண்டால்
தீண்டு மனிதர்வாய்க்குள்
மாண்டன பல்கோடியாம்—சகியே
மாண்டன பல்கோடியாம்!

பறவை மிருகமுண்டோர்
பறையர் என்றால் மனுநூல்
முறையென்பார் பேரென்னடி—சகியே
முறையென்பார் பேரென்னடி?

வெறிமது உண்போர் நீசர்
என்றால் பிறர்க்கிநாட்டில்
நிறைமுக்கா டேதுக்கடி?—சகியே
நிறைமுக்கா டேதுக்கடி?

சீலம் குறைந்தோர் என்றால்
சீலமிலாச் சிலரை
ஞாலத்தில்ஏன் தீண்டினார்—சகியே
ஞாலத்தில்ஏன் தீண்டினார்?

மேலைவழக்கங் கொண்டு
மிகுதாழ்ந்தோர் என்றாலந்தக்
காலத்தில் தாழ்ந்தாருண்டோ?—சகியே
காலத்தில் தாழ்ந்தாருண்டோ?

சாத்திரம் தள்ளிற்றென்றால்
சற்றும் அதுதான் எங்கள்
கோத்திரத் தார்செய்ததோ?—சகியே
கோத்திரத் தார்செய்ததோ?

வாய்த்திறம் கொண்ட மக்கள்
வஞ்சம் யாவையும் நம்பி
நேத்திரம் கெட்டோமடி—சகியே
நேத்திரம் கெட்டோமடி!

மனிதரிற் றாழ்வுயர்வு
வகுக்கும் மடையர் வார்த்தை
இனிச்செல்ல மாட்டாதடி—சகியே
இனிச்செல்ல மாட்டாதடி!

கனிமா மரம் வாழைக்காய்
காய்க்காதெனில் இரண்டும்
தனித்தனிச் சாதியடி—சகியே
தனித்தனிச் சாதியடி!

எருமையைப் பசுச்சேர்தல்
இல்லை; இதனாலிவை
ஒருசாதி இல்லையடி!—சகியே
ஒருசாதி இல்லையடி!

ஒருதாழ்ந்தோன் உயர்ந்தாளை
ஒப்பக் கருங்கொள்ளுங்கால்
இருசாதி மாந்தர்க்குண்டோ?—சகியே
இருசாதி மாந்தர்க்குண்டோ?

உழைப்பால் உயர்ந்தவர்கள்
தாழ்ந்தவர்கள் என்றன்னோர்
பிழைப்பைக் கெடுத்தாரடி—சகியே
பிழைப்பைக் கெடுத்தாரடி!

தொழிலின் றிச் சோறுண்ணாச்
சுத்தர் அசுத்தர் என்ப
தெழிலற்ற வார்த்தையடி—சகியே
எழிலற்ற வார்த்தையடி!

உடல்நோய்கள் அற்றபேரை
ஒழுக்கமில்லார் என்பவர்
கடலைஉளுந் தென்பரோ?—சகியே
கடலைஉளுந் தென்பரோ?

தடையற்ற அன்பினரைச்
சண்டாளர் என்றுசொல்லும்
கடையர்க்கு வாழ்வேதடி?—சகியே
கடையர்க்கு வாழ்வேதடி?

பழிப்பவர்க்கும் உதவும்
பாங்கர் பறையர் என்பார்
விழித்துத் துயில்வாரடி—சகியே
விழித்துத் துயில்வாரடி?

தழைக்கப் பிள்ளைபெறுவோர்
தாழ்வாம்! பிள்ளைக்கையரை
அழைப்போர்கள் மேலோர்களாம்—சகியே
அழைப்போர்கள் மேலோர்களாம்!

தோள்தான் பொருள் என்போர்கள்
தாழ்வாம்; துரும்பெடுக்கக்
கூடாதோர் மேலென்பதாம்—சகியே
கூடாதோர் மேலென்பதாம்!

மாடா யுழைப்பவர்கள்
வறியர்; இந்நாட்டுத் தொழில்
நாடாதோர் செல்வர்களோ?—சகியே
நாடாதோர் செல்வர்களோ?

ஏரிக்கரையினில் வாழ்ந்
திருந்து பிறரைக்காக்கும்
சேரியர் தாழ்ந்தார்களோ?—சகியே
சேரியர் தாழ்ந்தார்களோ?

ஊருக்கி ழிந்தோர் காவல்
உயர்ந்தோர் இவர்கள் வாழ்வின்
வேருக்கு வெந்நீரடி—சகியே
வேருக்கு வெந்நீரடி!

அங்கம் குறைச்சலுண்டோ
ஆதித் திராவிடர்க்கே?
எங்கேனும் மாற்றமுண்டோ;—சகியே
எங்கேனும் மாற்றமுண்டோ?

புங்கவர் நாங்கள்என்பார்
பூசுரர் என்பார்நாட்டில்
தங்கட்கே எல்லாம் என்பார்—சகியே
தங்கட்கே எல்லாம் என்பார்!

ஆதிசைவர்கள் என்பார்,
"ஆதிக்குப் பின் யார்" என்றால்
காதினில் வாங்காரடி!—சகியே
காதினில் வாங்காரடி!

சாதியில் கங்கைபுத்ரர்
என்பார்கள் சாட்சி, பத்ரம்
நீதியில் காட்டாரடி—சகியே
நீதியில் காட்டாரடி!

வேலன்பங் காளியென்பார்
வெறுஞ்சேவ கனைக்கண்டால்
காலன்தான் என்றஞ்சுவார்—சகியே
காலன்தான் என்றஞ்சுவார்!

மேலும் முதலி; செட்டி;
வேளாளப் பிள்ளைமுதல்
நாலாயிரம் சாதியாம்—சகியே
நாலாயிரம் சாதியாம்!

எஞ்சாதிக் கிவர்சாதி
இழிவென்று சண்டையிட்டுப்
பஞ்சாகிப் போனாரடி!—சகியே
பஞ்சாகிப் போனாரடி!

நெஞ்சில் உயர்வாய்த் தன்னை
நினைப்பான் ஒருவேளாளன்
கொஞ்சமும் எண்ணாததால்—சகியே
கொஞ்சமும் எண்ணாததால்!

செட்டி உயர்ந்தோன் என்பான்
செங்குந்தன் உயர்வென்பான்
குட்டுக்கள் எண்ணாததால்—சகியே
குட்டுக்கள் எண்ணாததால்!

செட்டிகோ முட்டிநாய்க்கன்
சேணியன் உயர்வென்றே
கட்டுக் குலைந்தாரடி—சகியே
கட்டுக் குலைந்தாரடி!

சேர்ந்துயர் வென்றிவர்கள்
செப்பினும் பார்ப்பனர்க்குச்
சூத்திரர் ஆனாரடி—சகியே
சூத்திரர் ஆனாரடி!

தூற்றிட இவ்வுயர்ந்தோர்
சூத்திரர் என்றுபார்ப்பான்
காற்றினில் விட்டானடி—சகியே
காற்றினில் விட்டானடி!

தம்மை உயர்த்தப் பார்ப்பார்
சமூகப் பிரிவுசெய்தார்
இம்மாயம் காணாரடி—சகியே
இம்மாயம் காணாரடி!

பொய்மை வருணபேதம்
போனால் புனிதத்தன்மை
நம்மில்நாம் காண்போமடி—சகியே
நம்மில்நாம் காண்போமடி

நான்கு வருணம் என்று
நவிலும் மனுநூல்விட்டு
ஏனைந்து கொண்டாரடி—சகியே
ஏனைந்து கொண்டாரடி!

நான்கு பிரிவும் பொய்ம்மை
நான்குள்ளும் பேதம் என்றால்
ஊனத்தில் உள்ளனமாம்—சகியே
ஊனத்தில் உள்ளனமாம்!

சதுர்வர்ணம் வேதன் பெற்றான்
சாற்றும் பஞ்சமர் தம்மை
எது பெற்றுப் போட்டதடி—சகியே
எது பெற்றுப் போட்டதடி?

சதுர்வர்ணம் சொன்னபோது
தடிதூக்கும் தமிழ்மக்கள்
அதில்ஐந்தாம் நிறமாயினார்—சகியே
அதில்ஐந்தாம் நிறமாயினார்!

மனிதரில் தீட்டுமுண்டோ?
மண்ணிற் சிலர்க்கிழைக்கும்
அநீதத்தை என்சொல்வதோ?—சகியே
அநீதத்தை என்சொல்வதோ?

"புனிதர்என் றேபிறத்தல்"
"புல்லர்என் றேபிறத்தல்"
எனுமிஃது விந்தையடி—சகியே
எனுமிஃது விந்தையடி!

ஊரிற் புகாதமக்கள்
உண்டென்னும் மூடரிந்தப்
பாருக்குள் நாமேயடி—சகியே
பாருக்குள் நாமேயடி!

நேரிற்பார்க் கத்தகாதோர்
நிழல்பட்டால் தீட்டுண்டென்போர்
பாருக்குள் நாமேயடி—சகியே
பாருக்குள் நாமேயடி!

மலம்போக்கும் குளம்மூழ்கா
வகைமக்களை நசுக்கும்
குலமாக்கள் நாமேயடி—சகியே
குலமாக்கள் நாமேயடி!

மலம்பட்ட இடம் தீட்டாம்
மக்கள் சிலரைத் தொட்டால்
தலைவரைக்கும் தீட்டாம்—சகியே
தலைவரைக்கும் தீட்டாம்!

சோமனைத் தொங்கக்கட்டச்
சுதந்தரம் சிலர்க்கியாத்
தீமக்கள் நாமேயடி—சகியே
தீமக்கள் நாமேயடி!

தாமூழ்கும் குளம் தன்னில்
தலைமூழ்கத் தகாமக்கள்
போமாறு தானென்னடி?—சகியே
போமாறு தானென்னடி?

பாதரட்சை யணிந்தாற்
பழித்துச் சிலரைத் தாழ்த்தும்
காதகர் நாமேயடி—சகியே
காதகர் நாமேயடி.

ஓத வசதியின்றி
உலகிற் சிலரைத் தாழ்த்தும்
சூதர்க்கு வாழ்வேதடி?—சகியே
சூதர்க்கு வாழ்வேதடி!

தீராப் பகையுமுண்டோ
திருநாட்டார்க் குள்ளும்நெஞ்சம்
நேராகிப் போனாலடி—சகியே
நேராகிப் போனாலடி!

ஓரைந்து கோடிமக்கள்
ஓலமிடுங்கால் மற்றோர்
சீராதல் இல்லையடி—சகியே
சீராதல் இல்லையடி!

தாழ்வில்லை உயர்வில்லை
சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி—சகியே
வாழ்வெல்லை காண்போமடி!

சூழ்கின்ற பேதமெல்லாம்
துடைத்தே சமத்துவத்தில்
வாழ்கின்றார் வாழ்வின்பமாம்—சகியே
வாழ்கின்றார் வாழ்வின்பமாம்!

## ஆலய உரிமை

(ஆறுமுக வடிவேலனே—கலியாணமும்
செய்யவில்லை என்ற காவடிச்சிந்தின்
மெட்டு)

### கண்ணிகள்

எவ்வுயிரும் பரன் சந்நிதி யாமென்
றிசைத்திடும் சாத்திரங்கள்—எனில்
அவ்விதம் நோக்க அவிந்தனவோ நம்
அழகிய நேத்திரங்கள்?

திவ்விய அன்பிற் செகத்தையெல்லாம் ஒன்று
சேர்த்திடலாகும் அன்றோ?—எனில்
அவ்வகை அன்பினிற் கொஞ்சம் இருந்திடில்
அத்தனை பேரும் ஒன்றே?

ஏக பரம்பொருள் என்பதை நோக்க
எல்லாரும் உடன் பிறப்பே—ஒரு
பாகத்தார் தீண்டப்படாதவர் என்பதி
லேஉள்ளதோ சிறப்பே?

"தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை" என்று
செப்பிடும் தேசத்திலே—பெரும்
போகம் சுமந்துடற் பேதம்கொண்டோம்; மதி
போயிற்று நீசத்திலே.

என்னை அழைக்கின்ற கோயிலின் சாமி
எனக் கிழிவாய்த் தெரியும்—சாதி
தன்னை விலக்கிடுமோ இதை யோசிப்பீர்
சமூகநிலை புரியும்.

என்னை அளித்தவர் ஓர்கடவுள் மற்றும்
ஏழையர்க் கோர் கடவுள்—எனில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக் குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள்

உயர்ந்தவர் கோயில் உயர்ந்ததென்பீர் மிகத்
தாழ்ந்தது தாழ்ந்த தென்பீர்—இவை
பெயர்ந்து விழுந்தபின் பேதமிலா ததைப்
பேசிடுவீர் அன்பீர்.

உயர்ந்தவர் கையில் வரத்தினைச் சாமி
ஒளி மறைவில் தரத்தான்—மிகப்
பயந்திழிந் தோர்களைக் கோயில் வராவண்ணம்
பண்ணினதோ அறியேன்.

சோதிக் கடவுளும் தொண்டரும் கோயிலிற்
சூழ்வது பூசனையோ—ஒரு
சாதியை நீக்கினார்; தலையையும் வாங்கிடச்
சதியா லோசனையோ?

ஆதித் திராவிடர் பாரதர்க் கன்னியர்
என்று மதித்ததுவோ—சாமி
நீதிசெய் வெள்ளையர் வந்ததும் போய்க்கடல்
நீரிற் குதித்ததுவோ?

மாலய மாக வணங்கிடச் சாமி
வந்திடுவார் என்றீரே—அந்த
ஆலயம் செல்ல அநேகரை நீக்கி
வழிமறித்தே நின்றீரே.

ஆலயம் செல்ல அருகரென்ற சிலர்
அங்கம் சிறந்தாரோ?—சிலர்
நாலினும் கீழென்று நாரி வயிற்றில்
நலிந்து பிறந்தாரோ?

தாழ்ந்தவர் தம்மை உயர்ந்தவ ராக்கிடச்
சாமி மலைப்பதுண்டோ?—இங்கு
வாழ்ந்திட எண்ணிய மக்களைச் சாமி
வருத்தித் தொலைப்பதுண்டோ?

தாழ்ந்தவர் வந்திடில் தன்னுயிர் போமெனில்
சாமிக்குச் சத்திலையோ—எனில்
வீழ்ந்த குலத்தினை மேற்குல மாக்கிட
மேலும் சமர்த்தில்லையோ?

தன்னை வணங்கத் தகாதவரை அந்தச்
சாமி விழுங்கட்டுமே—அன்றி
முன்னையிருந்த கல்லொடு கல்லாகி
உருவம் மழுங்கட்டுமே.

இன்னலை நீக்கிடும் கோயிலின் சாமி
இனத்தினில் பல்கோடி—மக்கள்
தன்னை வணங்கத் தகாதென்று சொல்லிடிற்
சாவதுவோ ஓடி?

குக்கலும் காகமும் கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் தீட்டிலையோ—நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டிலையோ?

திக்கெட்டுமே ஒரு கோயிலன்றோ? அதில்
சேரி அப்பால் இல்லையே—நாளும்
பொய்க்கட் டுரைப்பவர் புன்மையும் பேசுவர்
நம்புவதோ சொல்லையே?

தாழ்ந்தவர் என்பவர் கும்பிடுதற்குத்
தனிக் கோயில் காட்டுவதோ?—அவர்
வாழ்ந்திடுதற்கும் தனித்தேசம் காட்டிப்பின்
வம்பினை மூட்டுவதோ?

தாழ்த்தப் பட்டார்க்குத் தனிக்கோயில் நன்றெனச்
சாற்றிடும் தேசமக்கள்—அவர்
வாழ்த்தி அழைக்கும் "சுதந்தரம்" தன்னை
மறித்திடும் நாசமக்கள்

தாழ்ந்தவருக்கும் உயர்ந்தவருக்கும் இத்
தாழ்நிலம் சொந்தம் அன்றோ?—இதில்
சூழ்ந்திடும் கோயில் உயர்ந்தவர்க்கே என்று
சொல்லிடும் நீதி நன்றோ?

"தாழ்ந்தவர்" என்றொரு சாதிப்பிரிவினைச்
சாமி வகுத்ததுவோ?—எனில்
வாழ்ந்திடு நாட்டினில் சாமி முளைத்திந்த
வம்பு புகுத்தியதோ?

முப்பது கோடியார் பாரதத்தார் இவர்
முற்றும் ஒரே சமூகம்—என
ஒப்புந் தலைவர்கள் கோயிலில் மட்டும்
ஒப்பாவிடில் என்ன சுகம்?

இப்பெரு நாடும் இதன்பெருங் கூட்டமும்
"யார்" என்று தற்புகழ்ச்சி—சொல்வர்
இப்புறம் வந்ததும் கோயிலில்—நம்
இனத்தைச் செய்வார் இகழ்ச்சி.

மாடுண்பவன் திருக் கோயிலின் வாயிலில்
வருவதற்கில்லை சாத்யம்—எனில்
ஆடுண்ணுவோனுக்கு மாடுண்ணுவோன் அண்ணன்
அவனே முதற் பாத்யம்.

நீடிய பக்தியில் லாதவர் கோயில்
நெருங்குவதால் தொல்லையே!—எனில்
கூடி அக் கோயிலில் வேலை செய்வோருக்கும்
கூறும்பக்தி இல்லையே.

"சுத்தமில்லாதவர் பஞ்சமர்!" கோயிற்
சுவாமியைப் பூசிப்பரோ—எனில்
நித்த முயர்ந்தவர் நீரிற் குளிப்பது
யாதுக்கு யோசிப்பிரே.

நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி
நேரில்அக் கோயிலிலே—கண்டும்
ஒத்த பிறப்பின ரைமறுத் திருங்கள்
கோயிலின் வாயிலிலே.

கூறும் "உயர்ந்தவர்" தாழ்ந்தவர்" என்பவர்
கோயிலின் செய்திவிட்டுப்—புவி
காறியு மிழ்ந்தது யார்முகத்தே யில்லை?
காட்டுவீர்ஒன்று பட்டு.

வீறும் உயர்ந்தவர் கோயில் புகுந்ததில்
வெற்றிஇந் நாட்டில் உண்டோ—இனிக்
கூறும் இழிந்தவர் கோயில் புகுந்திடில்
தீதெனல் யாது கொண்டோ?

## ஞாயமற்ற மறியல்

### (நொண்டிச் சிந்து)

என்றுதான் சுகப்படுவதோ?—நம்மில்
யாவரும் "சமானம்" என்ற பாவனை இல்லை—அந்தோ
ஒன்றுதான் இம் மானிடச் சாதி—இதில்
உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ?—நம்மில்
அன்றிருந்த பல தொழிலில்—பெயர்
அத்தனையும் "சாதிகள்" என்றாக்கிவிட்டனர்—இன்று
கொன்றிடுமே "பேதம்" எனும் பேய்!—மிகக்
கூசும்இக் கதை நினைக்கத் தேசமக்களே! (என்று)

இத்தனை பெரும் புவியிலே—மிக
எண்ணற்ற தேசங்கள் இருப்ப தறிவோம்
அத்தனை தேசத்து மக்களும்—தாம்
அனைவரும் "மாந்தர்" என்று நினைவதல்லால்-மண்ணில்
இத்தகைய நாட்டு மக்கள்போல்—பேதம்
எட்டுலக்ஷம் சொல்லிமிகக் கெட்டலைவாரோ!—இவர்
பித்துமிகக் கொண்டவர்கள்போல்—கம்
பிறப்பினில் தாழ்வுயர்வு பேசுதல் நன்றோ? (என்று)

தீண்டாமை என்னுமொரு பேய்—இந்தத்
தேசத்தினில் மாத்திரமே திரியக்கண்டோம்—எனில்
ஈண்டு பிறநாட்டில் இருப்போர்—செவிக்
கேறியதும் இச்செயலைக் காறி யுமிழ்வார்
ஆண்டாண்டு தோறு மிதனால்—நாம்
அறிவற்ற மக்கள் எனக் கருதப் பட்டோம்
கூண்டோடு மாய்வ தறிந்தும்—இந்தக்
கோணலுற்ற செயலுக்கு நாணுவதில்லை நாம் (என்று)

ஞானிகளின் பேரப் பிள்ளைகள்—இந்த
நாற்றிசைக்கும் ஞானப்புனல் ஊற்றிவந்தவர்—மிகு
மேனிலையில் வாழ்ந்து வந்தவர்—இந்த
மேதினியில் மக்களுக்கு மேலுயர்ந்தவர்—இந்த
வானமட்டும் புகழ்ந்து கொள்வார்—எனில்
மக்களிடைத் தீட்டுரைக்கும் காரணத்தினை—இங்கு
யானிவரைக் கேட்கப் புகுந்தால்—இவர்
இஞ்சிதின்ற குரங்கென இளித்திடுவார்—நாம் (என்று)

உயர்மக்கள் என்றுரைப்பவர்—தாம்
ஊரை அடித் துலையிலிட் டுண்ணுவதற்கே—அந்தப்
பெயர் வைத்துக் கொள்ளுவதல்லால்—மக்கள்
பேதமில்லை என்னுமிதில் வாதமுள்ளதோ?—தம்
வயிற்றுக்கு விதவித ஊண்—நல்ல
வாகனங்கள் போகப்பொருள் அநுபவிக்க—மிக
முயல்பவர் தம்மிற் சிலரை—மண்ணில்
முட்டித்தள்ள நினைப்பது மூடத்தனமாம்—நாம் (என்று)

உண்டி விற்கும் பார்ப்பனனுக்கே—தான்
உயர்ந்தவன் என்ற பட்டம் ஒழிந்துவிட்டால்—தான்
கண்டபடி விலை உயர்த்தி—மக்கள்
காசினைப் பறிப்பதற்குக் காரணமுண்டோ?—சிறு
தொண்டு செய்யும் சாதி என்பதும்—நல்ல
துரைத்தனச் சாதியென்று சொல்லிக் கொள்வதும்—இவை
பண்டிருந்த தில்லை எனினும்—இன்று
பகர்வது தாங்கள் நலம் நுகர்வதற்கே—நாம் (என்று)

வேதமுணர்ந் தவன் அந்தணன்—இந்த
மேதினியை ஆளுபவன் க்ஷத்திரியனாம்—மிக
நீதமுடன் வர்த்தகம் செய்வோன்—மறை
நியமித்த வைசியனென் றுயர்வு செய்தார்—மிக
நாதியற்று வேலைகள் செய்தே—முன்பு
நாத்திறம் அற்றிருந்தவன் சூத்திரம் என்றே—சொல்லி
ஆதியினில் மநுவகுத்தான்—இவை
அன்றியுமே பஞ்சமர்கள் என்பதும் ஒன்றாம்—நாம்
(என்று)

அவனவன் செய்யும் தொழிலைக்—குறித்
தவனவன் சாதியென மநுவகுத்தான்—இன்று
கவிழ்ந்தது மநுவின் எண்ணம்—இந்தக்
காலத்தினில் நடைபெறும் கோலமும் கண்டோம்—மிகக்
குவிந்திடும் நால்வருணமும்—கீழ்க்
குப்புறக் கவிழ்ந்ததென்று செப்பிடத்தகும்—இன்று
எவன்தொழில் எவன் செய்யினும்—அதை
ஏனென்பவன் இங்கொருவனேனுமில்லையே—நாம்
(என்று)

பஞ்சமர்கள் எனப்படுவோர்
பாங்கடைவ தால் நமக்குத் தீங்குவருமோ—இனித்
தஞ்சமர்த்தை வெளிப்படுத்தித்—தம்
தலைநிமிர்ந் தாலது குற்றமென்பதோ—இது
வஞ்சத்திலும் வஞ்சமல்லவோ—பொது
வாழ்வினுக்கும் இதுமிகத் தாழ்வேயல்லவோ—நம்
நெஞ்சத்தினில் ஈரமில்லையோ?—அன்றி
நேர்மையுடன் வாழுமதிக் கூர்மையில்லையோ—நாம்
(என்று)

கோரும் "இமயாசல" முதல்—தெற்கில்
கொட்டுபுனல் நற் "குமரி" மட்டும் இருப்போம்—இவர்
யாருமொரு சாதியெனவும்—இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லையெனவும்—நம்
பாரதநற் றேவிதனக்கே—நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை இக்கணம்—அந்த
ஒருணர்ச்சி தோன்றியஉடன்—அந்த
ஒற்றுமை அன்றோ நமக்கு வெற்றியளிக்கும்—நாம்
(என்று)

## சகோதரத்வம்

உறுதி உறுதி உறுதி

ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கே — இறுதி! (உறுதி)
உறவினர் ஆவார் ஒருநாட்டார் — எனில் (உறுதி)

பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை — இந்தப்
பிழைநீங்குவதே உயிருள்ளாரின் கடமை — நம்மிற்
குறைசொல வேண்டாம் உறவினர் பகைநீங்குங்கோள் — உங்கள்
குகையினை விட்டே வெளிவருவீர்சிங் கங்காள் (உறுதி)

நாட்டுக் குலையில் தீட்டுச் சொல்வார் மொழியை — நாமே
நம்பித் தேடிக் கொண்டோம் மீளாப் பழியை — நாட்டின்
கோட்டைக் கதவைக் காக்கத் தவறும் அந்நாள் — இந்தக்
குற்றம் செய்தோம்; விடுவோம்; வாழ்வோம் இந்நாள் (உறுதி)

வாழ்விற் செம்மை அடைதல் வேண்டும் நாமே — நம்மில்
வஞ்சம் காட்டிச் சிலரைத் தாழ்த்தல் தீமை — புவியில்
வாழ்வோ ரெல்லாம் சம தர்மத்தால் வாழ்வோர் — மற்றும்
வரிதிற் றாழ்வோர் பேதத்தாலே தாழ்வோர் (உறுதி)

தேசத்தினர்கள் ஓர்தாய் தந்திடு சேய்கள் — இதனைத்
தெளியா மக்கள் பிறரை நத்தும் நாய்கள் — மிகவும்
நேசத்தாலே நாமெல்லாரும் ஒன்றாய் — நின்றால்
நிறைவாழ் வடைவோம் சலியாவயிரக் குன்றாய் (உறுதி)

பத்துங் கூடிப் பயனைத்தேடும் போது — நம்மில்
பகைகொண் டிழிவாய்க் கூறிக்கொள்ளல் தீது — நம்
சித்தத்தினிலே இருளைப் போக்கும் சொல்லை — கேளீர்
சென்னத் தாலே உயர்வும் தாழ்வும் இல்லை (உறுதி)

## சேசு பொழிந்த தெள்ளமுது

மேதினிக்குச் சேசு நாதர் எதற்கடி தோழி—முன்பு
வெம்மைகொள் மக்களைச் செம்மை புரிந்திடத் தோழா—அவர்

காதினிக்கும்படி சொன்னசொல் ஏதடி? தோழி—அந்தக்
கர்த்தர் உரைத்தது புத்தமு தென்றறி தோழா—அந்தப்

பாதையில் நின்று பயனடைந்தார் எவர் தோழி—இந்தப்
பாரதநாட்டினர் நீங்கிய மற்றவர் தோழா—இவர்

ஏதுக்கு நன்மைகள் ஏற்கவில்லை உரை தோழி—இங்கு
ஏசுவின் கட்டளை நாசம் புரிந்தனர் தோழா.

ஏசுமதத்தினில் இந்துக்கள் ஏனடி? தோழி—அந்த
இந்துக்கள் தீயிட்ட செந்துக்கள் ஆயினர் தோழா—மிக

மோசம் அவர்க்கென்ன வந்தது கூறடி தோழி—அட
முன்—மனு என்பவன் சொன்னதில் வந்தது தோழா—அவன்

நாசம் விளைக்க நவின்றது யாதடி தோழி—சட்டம்
நால் வருணத்தினில் நாலாயிரம் சாதி தோழா—ஏசின்

ஆசை மதம்புகப் பேதம் அகன்றதோ? தோழி—அவர்க்
கங்குள்ள மூதேவி இங்கும் முளைத்தனள் தோழா.

ஃ ஃ ஃ

சொல்லிய சேசுவின் தொண்டர்கள் எங்கடி? தோழி—அந்தத்
தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பறந்தது தோழா—அந்தப்

புல்லிய பேதத்தைப் போக்கினரோ அவர்? தோழி—அதைப்
போதாக் குறைக்குமுப் போகம் விளைத்தனர் தோழா—அடி

எல்லையில் பேதம் இழைத்தது தான் எவர்? தோழி—அட
இந்த நெடுஞ்சட்டை அந்தகரே அறி தோழா—முன்பு

வல்லவர் சேசு வகுத்ததுதான் என்ன? தோழி—புவி
'மக்கள் எல்லாம் சமம்' என்று முழக்கினர் தோழா.

ஈண்டுள்ள தொண்டர்கள் என்னசெய்கின்றனர் தோழி—அவர்
ஏழைகள் தாழ்வுறச் செல்வரை வாழ்த்தினர் தோழா—அடி

வேண்டவரும் திருக் கோயில் வழக்கென்ன? தோழி—அட
மேற்குலம் தாழ்குலம் என்று பிரித்தனர் தோழா—விரல்

பத்துங் கூடிப் பயனைத்தேடும் போது — நம்மில்
பகைகொண் டிழிவாய்க் கூறிக்கொள்ளல் தீது — நம்
சித்தத்தினிலே இருளைப் போக்கும் சொல்லை — கேளீர்
செனனத் தாலே உயர்வும் தாழ்வும் இல்லை (உறுதி)

## சேசு பொழிந்த தெள்ளமுது

மேதினிக்குச் சேசு நாதர் எதற்கடி தோழி—முன்பு
வெம்மைகொள் மக்களைச் செம்மை புரிந்திடத் தோழா—அவர்

காதினிக்கும்படி சொன்னசொல் ஏதடி? தோழி—அந்தக்
கர்த்தர் உரைத்தது புத்தமு தென்றறி தோழா—அந்தப்

பாதையில் நின்று பயனடைந்தார் எவர் தோழி—இந்தப்
பாரதநாட்டினர் நீங்கிய மற்றவர் தோழா—இவர்

ஏதுக்கு நன்மைகள் ஏற்கவில்லை உரை தோழி—இங்கு
ஏசுவின் கட்டளை நாசம் புரிந்தனர் தோழா.

ஏசுமதத்தினில் இந்துக்கள் ஏனடி? தோழி—அந்த
இந்துக்கள் தீயிட்ட செந்துக்கள் ஆயினர் தோழா—மிக

மோசம் அவர்க்கென்ன வந்தது கூறடி தோழி—அட
முன்—மனு என்பவன் சொன்னதில் வந்தது தோழா—அவன்

நாசம் விளைக்க நவின்றது யாதடி தோழி—சட்டம்
நால் வருணத்தினில் நாலாயிரம் சாதி தோழா—ஏசின்

ஆசை மதம்புகப் பேதம் அகன்றதோ? தோழி—அவர்க்
கங்குள்ள மூதேவி இங்கும் முளைத்தனள் தோழா.

ஃ ஃ ஃ

சொல்லிய சேசுவின் தொண்டர்கள் எங்கடி? தோழி—அந்தத்
தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பறந்தது தோழா—அந்தப்

புல்லிய பேதத்தைப் போக்கினரோ அவர்? தோழி—அதைப்
போதாக் குறைக்குமுப் போகம் விளைத்தனர் தோழா—அடி

எல்லையில் பேதம் இழைத்தது தான் எவர்? தோழி—அட
இந்த நெடுஞ்சட்டை அந்தகரே அறி தோழா—முன்பு

வல்லவர் சேசு வகுத்ததுதான் என்ன? தோழி—புவி
'மக்கள் எல்லாம் சமம்' என்று முழக்கினர் தோழா.

ஈண்டுள்ள தொண்டர்கள் என்னசெய்கின்றனர் தோழி—அவர்
ஏழைகள் தாழ்வுறச் செல்வரை வாழ்த்தினர் தோழா—அடி

வேண்டவரும் திருக் கோயில் வழக்கென்ன? தோழி—அட
மேற்குலம் தாழ்குலம் என்று பிரித்தனர் தோழா—விரல்

தீண்டப்படாதவர் என்பவர் யாரடி? தோழி—இங்குச்
சேசு மதத்தினை தாபித்த பேர்கள் என் தோழா—உளம்

தூண்டும் அருட்சேசு சொல்லிய தென்னடி? தோழி—அவர்
'சோதரர் யாவரும்' என்று முழங்கினர் தோழா.

பஞ்சமர் பார்ப்பனர் என்பதெல்லாம் என்ன? தோழி—இவை
பாரதநாட்டுப் பழிச்சின்னத்தின் பெயர் தோழா—இங்குக்

கொஞ்சமும் இப்பழி கொள்ளுதல் நல்லதோ? தோழி—ஒப்புக்
கொள்ளும் நிலத்தினில் கள்ளிமுளைத்திடும் தோழா—இங்கு

நெஞ்சினிற் சேசுவின் தொண்டர் நினைப்பென்ன
தோழா—தினம்
நேர்மையில் கோயில்வி யாபாரம் செய்வது தோழா—இந்த

வஞ்சகர்க்கென்ன வழுத்தினர் சேசு நல் தோழி—இன்ப
வாழ்க்கையடைந்திட யார்க்கும் சுதந்தரம் என்றார்

நாலு சுவர்க்கு நடுப்புறம் ஏதுண்டு? தோழி—அங்கு
நல்ல மரத்தினிற் பொம்மை அமைத்தனர் தோழா—அந்த

ஆலயம் சாமி அமைத்தவர் யாரடி? தோழி—மக்கள்
அறிவை இருட்டாக்கி ஆளநினைப்பவர் தோழா—மக்கள்

மாலைத் தவிர்த்து வழிசெய்வரோ இனித் தோழி—செக்கு
மாடுகளாக்கித்தம் காலைச்சுற்றச் செய்வர் தோழா—அந்தக்

கோலநற் சேசு குறித்துதா னென்ன? தோழி—ஆஹா
கோயிலென்றால் அன்பு தோய்மனம் என்றனர் தோழா.

ஃ ஃ ஃ

ஆண்மைகொள் சேசு புவிக்குப் புரிந்ததென்? தோழி—அவர்
அன்பெனும் நன்முரச செங்கும் முழக்கினர் தோழா—அந்தக்

கேண்மைகொள் சேசுவின்கீர்த்தி யுரைத்திடு தோழி—அவர்
கீர்த்தியுரைத்திட வார்த்தை கிடைக்கிலை தோழா—நலம்

தாண்டவம் ஆடிடச் செய்தவரோ அவர்? தோழி—அன்று
தன்னைப் புவிக்குத் தரும் பெருமானவர் தோழா—அந்த

ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத்தக்கவர் யாவர்—எனில்
'அன்னியர்' 'தான்' என்ற பேதமிலாதவர் தோழா.

□ □ □